**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18 ஆம் நாள் திங்கட்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி.க. இந்துமதி, கிரேடு III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.241/2018** வா.சா. 4 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | கஜேந்திரன் | **வயது** | : | 54 |
| **த.பெ** | : | கோவிந்தசாமி | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | சாணார்பாளையம் | **தொழில்** | : | விவசாயம் |

**<u>18.08.2025 – வா.சா. 4 முதல் விசாரணை (சாட்சி அழைப்பாணை மூலம் அழைத்து சாட்சியம் அளிக்கிறார்)</u>**

வாதிகளை எனக்கு தெரியும். வாதிகள் வசித்து வரும் வீடு சாணார்பாளையம் பிள்ளையார் கோவில் தெருவில் உள்ளது. வாதிகளை எனக்கு சுமாராக 40 வருடங்களாக தெரியும்.

**<u>வா.சா.4 குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது, சா்வே நெம்பர் தெரியாது. வாதிகளின் வீட்டின் கதவு எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு நீதிமன்றம் மூலம் அழைப்பாணை வந்தது ஆகையால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதிகள் குடியிருக்கும் வீடு அவர்களுக்கு எப்படி பாத்தியப்பட்டது (அ) பூர்வீக சொத்தா என்ற விவரங்கள் எனக்கு தெரியமா என்றால் தெரியாது. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாததால் இந்த வழக்கில் நான் அவசியமற்ற சாட்சி என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-B.Salma,
District Munsif,
Polur.